2022 ஜனவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல, அரசாணையின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, ஆங்காங்கே, தாலுகா தலைமையிடங்களில் எங்கெல்லாம் கருவூலம் இல்லை, எங்கெல்லாம் கருவூலம் தேவைப்படுகிறது என்ற பரிந்துரை பெறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறும் இடம் சம்பந்தமாக அந்த மாவட்டத்திலிருந்து என்ன பரிந்துரை வந்திருக்கிறது என்பது தற்போது தெரியவில்லை. அதனை அறிந்து, கருவூலம் அமைக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

19—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

*7385—**திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் (வடக்கு) தொகுதி, பூலுவபட்டியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கென்று பல நெறிமுறைகளை

நமது அரசாங்கம் வகுத்திருக்கின்றது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை அதை நிறைவு செய்யாத காரணத்தால் தற்போது அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த இயலாத நிலையில் இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் பொங்கல், புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூர் மாவட்டம், திருப்பூர் (வடக்கு) தொகுதியில், மாநகராட்சிப் பகுதியில், 4–வது வார்டில் உள்ள பூலுவபட்டியில் உயர்நிலைப் பள்ளி உள்ளது. அந்தப் பள்ளியிலே கிட்டத்தட்ட 1,050 மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள். அந்தப் பள்ளியில் போதிய இட வசதியும் உள்ளது. அங்கேயிருக்கின்ற குழந்தைகள் எல்லாம் வெகு தொலைவிலே இருந்து பள்ளிக்கு வரவேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, அதனையும் கருத்தில்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல, திருப்பூர் மாநகரம் என்றால், வெளிமாநிலம், வெளி மாவட்டம், வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் வசிக்கக்கூடிய பகுதி என்கிற சூழ்நிலையிலே, அங்கேயிருக்கின்ற ஏழை மக்களுடைய குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. அந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவ, மாணவியர்களெல்லாம் கிட்டத்தட்ட 4 கி.மீ. தொலைவிலே இருந்து வரக்கூடிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, போதிய இட வசதி உள்ள காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதற்கான பதிலை வழங்கியிருக்கிறோம். கிட்டத்தட்ட மூன்று அரசாணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அரசாணை எண் 235–ன்படி, பத்தாம் வகுப்பைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 100 மாணவர்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். அப்போதுதான் அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த முடியும். இரண்டு மேல்நிலைப் பள்ளிகளுக்கிடையே கிட்டத்தட்ட 8 கி.மீ. தூரம் இருக்க வேண்டும்

2022 ஜனவரி 7]

என்றிருக்கின்றது. அதுபோல, மகளிர் படிக்கின்ற பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். மலைவாழ் பகுதி, ஆதி திராவிட மக்கள்தொகை அதிகம் இருக்கின்ற பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றிருக்கின்றது. இதுமட்டுமல்ல, அரசாணை எண் 379–ன்படி, மக்களுடைய பங்குத் தொகையாக 2 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டும் என்றிருக்கின்றது. இதுமட்டுமல்லாமல் அரசாணை எண் 49–ன்படி, மாநகராட்சிப் பகுதி என்றால் 6 ground, *மாவட்டத் தலைமையிடம் என்றால் 8* ground, *பேரூராட்சி என்றால் ஒரு ஏக்கர், ஊராட்சி என்றால் 3 ஏக்கர் இடம் இருக்க வேண்டும்.*

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பள்ளியில் 174 மாணவர்கள் பயில்கிறார்கள். 100 மாணவர்களுக்கும் அதிகமாகத்தான் இருக்கின்றார்கள்; இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், மக்கள் பங்குத் தொகையான 2 இலட்சம் ரூபாய் இன்னும் செலுத்தப்படாமல்தான் இருக்கின்றது. 1.88 ஏக்கர்தான் இடம் இருக்கின்றது. இன்னும் அதிகமாக இடம் தேவைப்படுகின்றது. இதையெல்லாம் கருத்தில் எடுத்துக்கொண்டது மட்டுமல்லாமல், அருகில் 8 கி.மீ.–க்குள் கணக்கம்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கின்றது. ஐயன்காளிபாளையம் என்ற இடத்தில் வி.கே. அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கின்றது. பெருமாநல்லூர் என்ற இடத்தில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி இருக்கின்றது. 4 பள்ளிக்கூடங்கள் 8 கி.மீ. radius*–க்குள் இருப்பதனால் நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அரசு நெறிமுறைகளை முழுமையாக நிறைவு செய்யாத காரணத்தினால், தற்போது அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த இயலாத சூழ்நிலை உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போயம்பாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், பாப்பநாயக்கன்பாளையத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்த அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதுபோல மூன்று அரசாணையின் நெறிமுறைகளையும் பூர்த்தி செய்யும்பட்சத்தில் கண்டிப்பாக இதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, தரம் உயர்த்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முற்பகல் 10—45

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பாபநாசம் தொகுதியில், அம்மாபேட்டை, சின்னக் கடை தெருவில் ஓர் அரசு உயர்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்தப் பள்ளியில், சுற்று வட்டாரத்தில் உள்ள 50 கிராமங்களைச் சேர்ந்த பெரும்பாலான விவசாயத் தொழிலாளர்களின் பிள்ளைகள்தான் படித்து வருகின்றனர். இந்தச் சுற்று வட்டாரத்திலே வேறு அரசு மேல்நிலைப் பள்ளிகள் எதுவும் இல்லாத நிலையிலே, அம்மாபேட்டை, சின்னக் கடை வீதியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக வினவ விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்தின் கூடுதல் பொறுப்பு அமைச்சர் என்ற முறையில், கிட்டத்தட்ட நான்கு முறை அந்தச் சட்டமன்றத் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்திருக்கிறேன். மாண்புமிகு முனைவர் அய்யா அவர்களின் கோரிக்கையான, அம்மாபேட்டையில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த, C.E.Os மூலமாக தேவையான கருத்துரு பெறப்பட்டு, தேவைப்படும்பட்சத்தில்*

2022 ஜனவரி 7]
மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, ஆணை பெறப்பட்டு மேல்நிலைப் பள்ளியாக தரமுயர்த்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு மூன்று அரசாணைகளைக் குறிப்பிட்டுச் சொல்லி உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரமுயர்த்தித் தரப்படும் என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். பத்து உறுப்பினர்களுக்கு மேல் துணைக் கேள்விகள் கேட்கிறீர்கள். எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில், அந்தப் பதிலை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார், மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

உள் விளையாட்டு அரங்கம்

***3700—திரு. வே. சம்பத்குமார்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, அரூர் விளையாட்டு மைதானத்தில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, அரூர் விளையாட்டு மைதானத்தில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.